சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–9வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நிர்மலா | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | சதாசிவம் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

**<u>மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. அருண்ராம் இறப்பதற்கு 4 நாட்களுக்கு முன்பு காலை 7 மணி அளவில் நானும், என் கணவரும் டைனிங்டேபிளில் அமர்ந்து காபி அருந்தி கொண்டிருந்தோம் என்றும் அப்போது என் கணவரின் அலைபேசிக்கு அழைப்பு வந்தது என்றும் அந்த அழைப்பு எண் பெயர் இல்லாமல் வந்ததால் என் கணவர் யார் பேசுகிறீர்கள் என்று கேட்டார் என்றும் அதற்கு மஞ்சு என்று என் கணவரிடம் அறிமுகம் படுத்தி கொண்டார் என்றும் மேலும் அந்த அலைபேசியில் பெண்மணி பேசுவதால் என் கணவர் தன்னுடைய அலைபேசியை ஸ்பீக்கரில் போட்டு பேசும்போது மஞ்சு ஆனவர் என் கணவரை மாமா என்ற உறவுமுறையில் அழைத்து பேசினார் என்றும் அதன்பிறகு மஞ்சு தொடர்ச்சியாக என் கணவரிடம் மேற்கண்ட அழைபேசியில் மஞ்சுவாகிய நானும், இறந்து போன அருண்ராமும் கடந்த 8 வருடங்களாக காதலித்து வருகிறோம் என்று கூறியதாக அ.சா.1ன் ஆலோசனை பெயரில் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி மஞ்சுவின் பெற்றோர்களான ஆஜர் எதிரிகள் அருண்ராம், மஞ்சுவின் காதலை ஏற்றுக் கொள்ளாததால் மஞ்சுவிற்கு வேறு ஒரு இடத்தில் திருமணம் ஏற்பாடு செய்து உள்ளார்கள் என்று கூறினார் என்றும் மேலும் 18.06.2014 அன்று மஞ்சுவாகிய எனக்கு சென்னிமலையில் திருமணம் நடைபெற இருப்பதாக கூறினார் என்றும்

மஞ்சு மேலும் எனக்கு திருமணம் உறுதி ஆனதால் அருண்ராம் எவ்வித பிரச்சனை, தொந்தரவுகள் கொடுக்க வேண்டாம் என்று என்னிடமும், என் கணவரிடமும் கூறினார் என்றும் அதற்கு என் கணவரும், நானும் விசாரித்து பேசுகிறோம் என்று கூறினோம் என்று அ.சா.1ன் ஆலோசனை பெயரில் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

2. மேலும் என் கணவர் மற்றும் என்னிடம் மஞ்சு பேசி பிறகு மறுநாள் காலை சுமார் 7 மணி அளவில் 2ம் எதிரியான பானுமதி என் கணவர் அலைபேசிக்கு அழைத்தார் என்றும் என் கணவர் 2ம் எதிரி பானுமதியிடம் பேசிய விவரத்தை என்னிடம் கூறினார் என்றும் மேற்படி என் கணவர் அலைபேசியில் 2ம் எதிரியிடம் பேசி விவரம் ஆனது மஞ்சுவிற்கு திருமணம் நடப்பதால் அருண்ராமிடம் இருந்து எந்த தொந்தரவு இல்லாமல் பார்த்து கொள்ளவும் கூறினார் என்றும் மேலும் உங்களது பெண்ணை எப்படி பார்த்துக் கொள்விற்களோ அது போல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறினார் என்றும் அப்போது 2ம் எதிரியிடம் இருந்து அலைபேசியை 1ம் எதிரி வாங்கி என் கணவரிடம் மஞ்சுவின் திருமணத்தின்போதோ அல்லது திருமணத்திற்கு பின்போ பிரச்சனை தொந்தரவு அருண்ராமால் ஏற்பட்டால் என் கணவரின் தம்பியான அருண்ராமை மறந்துவிட வேண்டியதான் என்றும் எங்களுக்கும் ஈரோட்டில் ஆட்கள் உள்ளார்கள் என்று என் கணவரிடம் 1ம் எதிரி கூறினார் என்றும் அ.சா.1 ஆலோசனை படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 17.06.2014 அன்று அருண்ராம் இறந்த பிறகு 28.06.2014 அன்று அருண்ராம் எழுதிவைத்த தற்கொலை கடிதம் அவர்களின் பெற்றோர் அவரின் அறையை சுத்தம் செய்யும்போது கிடைத்தது என்றும் அந்த தற்கொலை கடிதத்தை போலீசாரிடம் அ.சா.1 ஆன வாசுதேவன் கொடுத்துவிட்டதாக என் கணவரிடம் கூறினார் என்றும் 15.06.2014 அன்று அருண்ராம் என்னையும், என் கணவரையும் எங்களுடைய மருத்துவமனைக்கு வந்து பார்த்தார் என்றும் அப்போது மன சோர்வுடன், மனம் உடைந்து இருந்தார் அவர் அழுது கொண்டு இருந்ததாகவும் அ.சா.1 ஆலோசனை படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. மேலும் அருண்ராம் என் கணவரிடமும், என்னிடமும் மஞ்சுவை கடந்த 8 வருடங்களாக தான் காதலித்து வந்ததாகவும், அருண்ராமும் மஞ்சுவும் திருமணம் செய்து கொள்வதாக உறுதியாக இருந்தோம் என்றும் மஞ்சுவின் பெற்றோரின் தூண்டுதலின் காரணமாக வேறு ஒரு நபரை திருமணம் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள் என்று கூறினார் என்றும் மேலும் அருண்ராம் தன்னுடைய அலைபேசியில் இருந்த மஞ்சு தன்னை

அழைத்து தொடர்ப்பு கொண்ட incoming மற்றும் outgoing அழைப்புகளை என்னிடமும், என் கணவரிடமும் காண்பித்தார் என்றும் மேலும் அருண்ராம் மிகுந்த மனவேதனையுடன் இருந்தார் என்றும் அவர் அழுதுகொண்டே இருந்தார் என்றும் அதன்பிறகு நானும், என் கணவரும் அருண்ராமுக்கு அறிவுரை கூறி அனுப்பிவைத்தோம் என்றும் நானும், என் கணவரும் அருண்ராமின் தந்தையான வாசுதேவனை என் கணவரின் அலைபேசி மூலம் அழைத்து மேற்கண்ட சங்கதிகளை கூறினோம் என்றும் மேலும் அருண்ராமை பார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தினோம் என்று அ.சா.1 ஆலோசனை பெயரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது நானும், என் கணவரும் அருண்ராமின் தந்தையான வாசுதேவனை என் கணவரின் அலைபேசி மூலம் அழைத்து மேற்கண்ட சங்கதிகளை கூறினோம் என்றும் மேலும் அருண்ராமை பார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தினோம் என்பதை சொல்லவில்லை என்ற சொன்னால் சரியல்ல. 3ம் எதிரி அருண்ராமை எப்போதும் காதலிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அருண்ராம் தன்னுடைய தாய், தந்தையர் வற்புறுத்தலின் பெயரில் தான் சென்னையில் இருந்துத 15.06.2014 அன்று ஈரோடு வந்தார் என்றால் சரிதான்.

5. மேற்படி வற்புறுத்தலின் காரணமாக தான் மனம் உடைந்து அருண்ராம் தற்கொலை செய்து கொணடார் என்றாலும் எதிரிகள் எவ்விதத்திலும் அருண்ராம் தற்கொலை செய்ததற்க்கு காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் மூவரும் நான் சொல்வது போல் என்னிடமோ, என் கணவரிடமோ அலைபேசியில் பேசவும் இல்லை மேற்கண்ட சங்கதிகளை சொல்லவும் இல்லை அதனால் தான் அந்த சங்கதிகள் குறித்து அன்றைய தினமோ அல்லது அருண்ராம் இறந்தபிறகோ அருண்ராமின் தாய், தந்தையாரிடமோ நானும், என் கணவரும் இது குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்சமயம் ருசிபடுத்த வேண்டும் என்பதற்காக அ.சா.1 கேட்டுகொண்டதன் பெயரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை.